**தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன சட்ட வரைஞர் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி திணைக்களத்தின் சட்ட வரைஞரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.5 |
| | | 2. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2.1 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் | நிதியுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படாமை | 2.8 |

பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமென்பதுவும் (கவனித்துக் கொள்வதற்கு போதுமான ஏற்பாடுகளைச் செய்தல் விசேடமாக அவரின் பொறுப்பாக உள்ளது)

## 2 பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

- அரசின் கொள்கைகளை சட்டமாக மாற்றுதல்.
- புதிய சட்டத்தை பிறப்பித்தல் மற்றும் ஏற்கனவேயுள்ள சட்டத்தை திருத்துவதற்காக மும்மொழிகளிலும் வரைவுகளை தயாரித்தல்.
- அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான சட்ட வரைவுகள் தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்குதல்.
- அதிகாரச்சட்ட உருவாக்கம் மற்றும் தொடர்புபட்ட பாராளுமன்ற கடமைகளை நிறைவேற்றுதல்.
- மாகாண சபைகளிற்கான நியதிச்சட்டங்களை தயாரித்தல்.

### 2.2 செயலாற்றல்

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு செயன்முன்னேற்ற அறிக்கைக் குறிப்பின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்டங்களை வரைதல் (மூல மற்றும் திருத்திய சட்டங்கள்), துணைச் சட்டங்களை திருத்துதல் மற்றும் மாகாண சபை நியதிச்சட்டங்களை தயாரித்தல் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை முறையே 259, 341 மற்றும் 27 ஆக காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளவாறு சட்ட வரைவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் சட்ட வரைஞரிடம் காணப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை முறையே 10, 31 மற்றும் 01 ஆகும். எவ்வாறாயினும், ஆரம்ப வரைவின் பின்னர் சட்டமா அதிபர் அல்லது ஏனைய திணைக்களங்களின் அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து காணப்படுகின்ற வேண்டுகோள்களின் எண்ணிக்கை முறையே 156, 126 மற்றும் 08 ஆகும். அவ்வாறு அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து வெளிநபர்களிடம் காணப்படுகின்ற வேண்டுகோள்கள் மொத்த வேண்டுகோள்களின் சதவீதமாக முறையே 60 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 30 சதவீதமாகக் காணப்பட்டன. அதற்கிணங்க, தமக்கென வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை கொண்டிராத திணைக்களமாகவுள்ள சட்ட வரைஞர் திணைக்களத்தின் செயலாற்றல் மீது மேற்படி விடயம் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 2.2.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

சட்டங்கள், நியதிச்சட்டங்கள் திருத்த செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 185 மில்லியன் ஆகும். இச் செயற்திட்டம் 2014 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்

திகதியில் உள்ளவாறு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 659,934, ரூபா 2,102,258, 1,939,829 மற்றும் 4,008,902 ஆக ரூபா 8,710,923 கூட்டுமொத்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட சதவீதம் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 4.7 சதவீதமாகும்.

**2.3 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 68.06 | 58.92 | 9.14 | 13 |
| | மூலதனம் | 50.55 | 6.09 | 44.46 | 88 |
| | **மொத்தம்** | **118.61** | **65.01** | **53.60** | **45** |
| 2014 | மீண்டெழுபவை | 69.85 | 67.98 | 1.87 | 3 |
| | மூலதனம் | 42.48 | 7.86 | 34.62 | 81 |
| | **மொத்தம்** | **112.33** | **75.84** | **36.49** | **32** |
| 2015 | மீண்டெழுபவை | 87.84 | 76.21 | 11.63 | 13 |
| | மூலதனம் | 70.81 | 11.92 | 58.89 | 83 |
| | **மொத்தம்** | **158.65** | **88.13** | **70.52** | **44** |
| 2016 | மீண்டெழுபவை | 86.56 | 76.90 | 9.66 | 11 |
| | மூலதனம் | 31.30 | 15.86 | 15.44 | 49 |
| | **மொத்தம்** | **117.86** | **92.76** | **25.10** | **21** |
| 2017 | மீண்டெழுபவை | 109.20 | 95.70 | 13.50 | 12 |
| | மூலதனம் | 30.20 | 28.74 | 1.46 | 5 |
| | **மொத்தம்** | **139.40** | **124.44** | **14.96** | **11** |

**2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காமல் 02 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் நிதியேற்பாட்டை ரூபா 0.1 மில்லியனால் விஞ்சி ரூபா 0.1 மில்லியனிற்கு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (ஆ) | வாகனம் நிரற்படுத்தப்படும் பட்டியல் | நிதிப் பிரமாணம் 1647 (உ) |

## 2.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியதுடன் திணைக்களத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரை காலாண்டிற்கு ஒரு கூட்டப்படி 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 2.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 83.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 42 | 29 | 13 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 28 | 14 | 14 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 54 | 40 | 14 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 24 | 22 | 02 | - |
| (v) | ஒப்பந்தம் | - | 04 | - | 04 |
| | **மொத்தம்** | **148** | **109** | **43** | **04** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பதவியணி வெற்றிடங்கள் காணப்படுதல்**

சிறந்த ஆளுகையை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க கொள்கைகளை சட்டத்திற்கு மாற்றி சட்டங்களை வரையும் கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நேரடியான பங்களிப்பை வழங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் (சிரேஷ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலை) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 70 ஆகக் காணப்பட்டதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 28 ஆகக் காணப்பட்டதனால் இது மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதற்கிணங்க மேற்படி விடயம் திணைக்களத்தின் செயலாற்றலிற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதவி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர் | 07 |
| உதவி சட்ட வரைஞர் | 05 |
| உதவிப் பணிப்பாளர் | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் (ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது) | 01 |
| பிரதம மொழிபெயர்ப்பாளர் | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 13 |
| | 28 |

திணைக்களத்தில் சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர் பதவிக்கான பதவியுயர்வுகளை வழங்குவதற்கு போதிய சேவைக் காலப்பகுதியை (10 ஆண்டுகள்) பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்கள் எவரும் திணைக்களத்தில் காணப்படாதமையும், மொழிபெயர்ப்பாளர் பதவி தொடர்பாக திருப்திகரமான தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படாததன் காரணமாக அப்பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றமையும் உதவி சட்ட வரைஞர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டன.

## 2.8 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

பிணை வைக்க வேண்டிய ஆறு (06) உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.